**29.09.2023–ந் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கையின் நகல்**

**தேவகோட்டை நகராட்சி.**
**அவசரக்கூட்டம்.**

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 29.09.2023–ம் தேதி வெள்ளிக்கிழமைகாலை 12.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

**பொருள் – 393**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3, மீனாட்சி அம்மன் நகர் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா அமைந்துள்ளது. பூங்கா வளாகத்திற்குள் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியும் அமைந்துள்ளது. பூங்காவினை சுற்றி சுற்றுசுவர் இல்லாத காரணத்தால் குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டிக்கு பாதுகாப்பு இல்லாமல் அன்னியர்கள் உள்ளே சென்று வரும் நிலை உள்ளது. மேலும் ஆடு, மாடு போன்ற கால்நடைகளும் உள்ளே செல்லும் நிலை உள்ளது. எனவே பூங்கா மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பாதுகாப்பு கருதி சுற்றுசுவர் கட்ட வேண்டியது அவசியமாகிறது. மேலும் பூங்கா வளாகத்தினுள் மராமரத்து பணி செய்திடவும் மதிப்பீடு ரு.9,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் 393– அனுமதிக்கப்பட்டது.**

––

**பொருள் – 394**

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 25.05.2023–ந் தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி 45 DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு வருகின்ற 31.07.2023 அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் நகரின் பிற பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு

பணிகள் அனைத்து 45 DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் இரண்டு மாத காலம் 01.08.2023 முதல் 30.09.2023 வரை பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7,00,000/– த்திற்கு செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.1769/2016/எச்1,</u>**

**தீர்மானம் 394– அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 395</u>

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளிலும் கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்சமயம் மழைக்காலம் என்பதாலும், கொசுக்களால் பரவக்கூடிய டெங்கு நோய் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாலும், கொசுப்புழு உற்பத்தியை தடுக்க (Mosquito Larvicide temephos 50 % ECA 100 லிட்டர் மற்றும் முதிர் கொசுக்களின் உற்பத்தியை குறைக்க Fogging Chemical pyrethrum 2 % 100 லிட்டர் உடனடியாக வாங்கி பயன்படுத்த உத்தேச செலவினம் ரூ.2,50,000/–த்திற்கு, நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண்.01762/2023/எச்1,</u>**

**தீர்மானம் 395 – அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 396</u>

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளில், 20,000 வீடுகளில் சுமார் 59000 மக்கள்தொகை உள்ள நிலையில் அரசு மற்றும் தனியார் பள்ளிகள் 30–க்கும், மேற்பட்ட பள்ளிகளில் சுமார் 6000 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். தற்சமயம் மழைக்காலம் என்பதாலும், டெங்கு நோய் பரவி வருவதாலும், டெங்கு நோய் பரவாமல் தடுக்க வழக்கமாக நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வரும் நிலையில், தற்சமயம் நிலவேம்பு பொடி இருப்பில் இல்லாததால், அவசர அவசியம் கருதி 150 கிலோ நிலவேம்பு பொடி வாங்கி பயன்படுத்தவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.2,25,000/–திற்கு, நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**
அ)மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.01763/2023/எச்1,**
**தீர்மானம் 396– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 397

தேவகோட்டை நகராட்சியில் பொதுசுகாதரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை விதிகள் மற்றும் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் போன்ற விழிப்புணர்வுகளை மக்களுக்கு ஏற்படுத்துவதற்கு தினசரி நாளிதழ்களான மக்கள்குரல், மாலைமலர், ஆகிய நாளிதழ்களில் விளம்பர செய்த வகையில் கீழ்கண்ட பட்டியல் தொகையினை மக்கள் குரல் மற்றும் மாலைமலர் செய்தித்தாள் கீழ்கண்ட நிறுவனங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாலைமலர் | MDU-D23060045 | ரூ. 9072 /– |
| 2. | மாலைமலர் | MDU-D23050155 | ரூ. 12600 /– |
| 3. | மக்கள் குரல் | MDU-MAB232400120 | ரூ.18144 /– |

மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் செலவுமேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**
மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.0682/2022/எச்1,**
**தீர்மானம் 397– அனுமதிக்கப்பட்டது.**

––

## பொருள் – 398

பொது சுகாதாரம் பிரிவின் கீழ் இந்நகராட்சி பகுதியில் 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள 31.07.2023–ந் தேதிய பணி நீட்டிப்பு உத்தரவு விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கி 45 DBC பணியாளர்களை கொண்டு பணி செய்து வரும் நிலையில் மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு வருகின்ற 30.09.2023 அன்று முடிவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் துப்புரவு ஆய்வாளர் குறிப்பில் இந்நகரில் உள்ள அனைத்து குடியிருப்புகள் வணிக வளாகங்கள், அரசு மற்றும் அரசு சாரா அலுவலகங்கள் நகரின் பிற பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி 45 DBC பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை விநியோகம் செய்து வரும் விவேகா அறக்கட்டளை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு முடிவடையும் நிலையில் பொது சுகாதாரப் பணி பாதிக்கா வண்ணம் இருக்கவும் பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மேலும் தற்சமயம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் விதிமுறைகளை பின்பற்றி செயல்படுத்த இயலாத நிலை உள்ளதால், மேற்படி நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள நிபந்தனைகளின்படி மேலும் ஒரு மாத

காலம் 01.10.2023 முதல் 31.10.2023 வரை பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,61,305/—க்கு, செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு—

அ)மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1769/2016/எச்1,**

**தீர்மானம் 398— அனுமதிக்கப்பட்டது.**

——

## பொருள் – 399

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பணிகளுக்கும் உரக்கிடங்கு பணிகளுக்கும் மற்றும் பருவமழைக்காலம் தொடங்கி விட்டதாலும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குளக்கால்களை சரிசெய்யவும், JCB இயந்திரம் மூலம் பணி செய்வதற்கு ஏற்கனவே விலைப்புள்ளி பெற்று இந்நகர்மன்ற முன் அனுமதி பெற்று லத்திகா தர்மிகா டிப்பர் &எர்த் மூவர்ஸ், தேவகோட்டை என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. அவ்வேலை உத்தரவானது 08.09.2023 உடன் முடிவடைவதால் பொதுசுகாதாரப்பணிகளின் அவசியம் கருதி லத்திகா தர்மிகா டிப்பர் & எர்த் மூவர்ஸ் தேவகோட்டை என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட விலைவிகிதம் ஒருமணி நேரத்திற்கு ரூ.850 /— வீதம் 09.09.2023 முதல் 09.12.2023 மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7,00,000/— செலவினம் மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு—

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5150/2021/எச்1,**

**தீர்மானம் 399— அனுமதிக்கப்பட்டது.**

——

## பொருள் – 400

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12 விநாயகபுரம், வார்டு எண்.13 மாந்தோப்பு தெரு, வார்டு எண்.15 கருப்பணசாமி முளைமேடு தெரு ஆகிய தெருக்களில் சாலைகளின் நடுவே பொதுமக்களின் போக்குவரத்திற்கு தடையாக உள்ள மின் கம்பங்களை அகற்றிட ஆகும் செலவீனம் ரூ.60,000/— மற்றும் வார்டு எண்.24, கைலாசநாதபுரம் மேற்கில் கேத்திரின்ஸ் பள்ளிக்கு செல்லும் சாலையின் நடுவே உள்ள உயர் மின் அழுத்த மின்கம்பம் மற்றும் அதன் அருகே உள்ள சாதாரண மின் கம்பம் ஆகிய மின்கம்பங்களை அகற்றிட ரூ.86,508/—ம் செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :—

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 400— அனுமதிக்கப்பட்டது.**

——

## <u>பொருள் – 401</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 10–வது தொகுதி நகராட்சி புதிய நடுநிலைப்பள்ளிக்கு மாணக்கர்களின் நலன் கருதி ஸ்மார்ட் கிளாஸ் அமைத்திடவும், பள்ளி முகப்புவாயிலில் பெயர் பலகையுடன் கூடிய ஆர்ச் வளைவு அமைக்கவும் மேலும் 9வது தொகுதி நடுநிலைப்பள்ளிக்கும் பெயர் பலகையுடன் கூடிய ஆர்ச் வளைவு அமைக்கவும் ரூ.10,00,000/– இலட்சத்திற்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 401– அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 402</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2022 – 2023ன் கீழ் திருப்பத்துார் ரோடு குறுக்குத்தெரு, விவேகானந்தபுரம் குறுக்குத்தெரு, அம்மச்சி ஊரணி நந்தவனம் குறுக்குத்தெரு ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்றது. மேற்காணும் பகுதிகளில் உள்ள விடுபட்ட தெருக்களில் பொதுமக்களின் நலன் கருதி தார்சாலை அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,90,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 402– அனுமதிக்கப்பட்டது.**

––

## <u>பொருள் – 403</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 சத்திரத்தார் தெரு அருணா காலனி பகுதியில் புதிய மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மழை காலங்களில் மழைநீர் தெருக்களில் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது. எனவே பொதுமக்களின் சுகாதார நலன் கருதி புதிய மழைநீர் வடிகால் அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4,00,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 403– அனுமதிக்கப்பட்டது.**

––

**பொருள் – 404**

தேவகோட்டை நகராட்சியில் **2023 – 2024** –ம் நிதியாண்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளை மாலைமலர் நாளிதழ் நிறுவனத்தார்க்கு விளம்பரம் வெளியிட்ட வகையில் செலவீன பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின் வருமாறு.

| வ.எண் | நாளிதழ் நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலைமலர் | MDU-D23090212 | 31,500/– |

மேற்காணும் விபரப்படி விளம்பரம் வெளியிட்டதற்கு மலர் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தாரிடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.31,500/–க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)மேற்காணும் பணிக்கான செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 404– அனுமதிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) கா. சுந்தரலிங்கம்**
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**

**/உண்மை நகல் /**

**மேலாளர்,**
**தேவகோட்டை நகராட்சி**